CC 186-2015
11.02.2021

அசா.2 குபம எண்.2799/2020 ன் கீழ் மறுபடியும் அழைக்கப்பட்டு 'Thermal Screening' பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டபின் நீதிமன்றத்திக்குள் அனுமதிக்கப்பட்டு குறுக்கு விசாரணை மேற்கொள்ளப்படுகிறது. சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் கூறுவதாவது

PW2 –கிருபாகரன்

நான் நெமம் டாஸ்மார்க் கடையில் விற்பனையாளராக பணியாற்றிவருகிறேன். ஒரு நாள் விட்டு ஒரு நாள் சுழற்சி முறையில் பணிபுரிவேன். 10.08.2014 அன்று நான் பணியில்தான் இருந்தேன். என்னுடன் உதவி விற்பனையாளர் ஆறுமுகம் பணியில் இருந்தார். கடையை சார்த்தும்போது அன்று மேற்பார்வையாளர் செந்தில்குமாரும் உடன் இருந்தார். மதுபானம் விற்பனை பில் மற்றும் பதிவேடுகளின் அடிப்படையில்தான் நடைபெறும். நாணய பதிவேட்டிலும் அன்றைய நாள் விற்பனை குறித்த விபரங்கள் பதிவு செய்யப்படும். தினமும் எவ்வளவு விற்பனையாகிறது என்பது குறித்து விற்பனை அறிக்கையில் மாவட்ட மேலாளர்க்கு அனுப்புவது வழக்கம். அன்றும் அனுப்பப்பட்டது. தொகை வசூல் பொறுத்து நிலைய மேற்பார்வையாளர்தான் பொறுப்பாவார். பணம் அரசு கொடுக்கப்பட்ட லாக்கரில் வைக்கப்பட்டது. லாக்கர் முன் அறை ரேக்கிற்கு பின்பாக தனியாக வைக்கப்பட்டுள்ளது. அந்த லாக்கர் வெளிபுற பூட்டு போடப்பட்டிருந்தது. விற்பனை முடிந்து பணத்தை லாக்கரில் உள்ளே வைக்கும்போது நானும் உதவி விற்பனையாளர் ஆறுமுகமும் எண்ணிபார்த்தோம். சரியாக இருந்தது. எனக்கு காலை 7.30 மணியளவில் திருட்டு சம்பந்தமாக தகவல் கிடைத்தவுடன் சுமார் ½ மணிநேரத்தில் கடைக்கு சென்றுவிட்டேன். நான் கடையை வந்தடைந்தபோது போலிசார் அங்கு வந்தடைந்தனர். நாங்கள் சென்றுபார்த்தபோது, லாக்கரின் வெளிப்புற பூட்டு உடைக்கப்பட்ட நிலையில் இருந்தது. போலிசார் வந்தபின்னர்தான் கடைக்குள் நாங்கள் சென்றுபார்த்தோம். போலிசார், நாங்கள் சென்றுபார்த்தபோது, கைரேகையும் எடுத்தக்கொண்டனர். படம் எடுத்துக்கொண்டனர். கடையில் சிசிடி கேமரா பொருத்தப்படவில்லை. பணத்தை பையில் வைத்துதான் உள்ளே வைத்தோம். அது என்ன பை என்று சரியாக தெரியவில்லை. எங்களது கடைக்கு வாட்ச்மேன் இல்லை. கடைக்கு வெளியே அருகே பேக்கரி, எலட்ரிக்கல் கடை அமைந்துள்ளது என்றால் சரிதான். பேக்கரி சிலநேரம் இரவு முழுவதும் இருக்கும். கடைக்கு முன்பாக எப்பொழுதும் லைட்கள் போடப்பட்டுதான் இருக்கும். கடை பல்லடம் ரோட்டின் மீதுதான் அமைந்துள்ளது. பல்லடம் ரோடு அடிக்கடி பேருந்து வந்துசெல்லும் ரோடு. பணம் திருடு போவதற்கு முன்பு பூட்டப்பட்ட லாக்கரின் சாவி செந்தில்வசம்தான் இருந்தது என்றால் சரிதான். 11.08.2014 அன்று காலை 8.30 மணியளவில் சம்பவ இடத்தில் வைத்தும் போலிசார் அசா.1 ஐ விசாரித்தார். காவல்நிலையத்திலும் விசாரித்தார். பணம் எவ்வாறு காணாமல் போயிருந்த விபரம் எனக்கு தெரியாது. எங்கள் கடையை ஒட்டி ஒரு மதுபான பார் உள்ளது. அன்று நாங்கள் கடையை பூட்டிச்செல்லும்போது மேற்படி பாரில் 2,3 நபர்களாவது இருந்திருப்பார்கள். புகார் கொடுத்தற்கு மறுநாள் காலை 10.00 மணியளவில் போலிசார் திருடப்பட்டதாக கூறப்படும் பணத்தை

கைபற்றிவிட்டனர் என்றால் சரிதான். திருடப்பட்ட பணம் அனைத்தும் கிடைத்துவிட்டது என்று போலிசார் கூறியதால், அந்த தகவலின் அடிப்படையில் காவல்நிலையம் சென்றோம். என்னுடன் அசா.1 செந்தில்குமாரும் வந்திருந்தார். நான் சொல்வது போல் சொல்லும் நேரத்தில் , தேதியில் நான் கடையில் இருந்திருக்கவில்லை என்றாலும், நான் சொல்லும் விதத்தில் சம்பவம் நடக்கவில்லை என்றாலும் சரியல்ல. எங்கள் கடைக்கு அடிக்கடி ஆய்விற்காக பறக்கும் படை அதிகாரிகள் வந்து பார்ப்பார்கள். திருட்டுக்குபின்பு மாவட்ட மேலாளர் வந்து பார்த்தார்கள். பறக்கும்படையினர் யாரும் வரவில்லை. பறக்கும்படையினர் ஆய்வின்போது சரிபார்க்கும்போது நாங்கள் பணத்தை காண்பிக்கவேண்டும் என்றால் சரிதான். பணம் எதுவும் திருடு போகவில்லை என்றாலும், அசா.1ம் நாங்களும் கையாடல் செய்துவிட்டு பறக்கும் படையினர் வினவ திருடு போய்விட்டதாக பொய் புகார் அளித்துள்ளோம் என்றால், அதனடிப்படையில் இவ்வழக்கில் எங்களை காப்பாற்றவேண்டி பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை

ஒம்/- க.செல்லையா,பிஏ.,பிஎல்.,
நடுவர் நீதிமன்றம் எண்.2
பொள்ளாச்சி